யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 165 ஆங்கிரச சித்திரை 28 (10.05.1992) ஞாயிறு


## இலங்கைப் பெண்கள் மீது துன்புறுத்தல் குவைத்திலிருந்து திருப்பி அனுப்பப்படுகின்றனர்

குவைத்திலிருந்து தினமும் பத்து இலங்கைப் பெண்கள் வரை அங்கிருந்து திருப்பி அனுப்பப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த பத்து நாட்களில் 130பேர் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அவர்களில் 12 பேர் கர்ப்பிணிகள் எனவும், 25 பேர் நோயாளிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. வேலை வாய்ப்பு முகவர்களால் ஏழைப் பெண்கள் குவைத்தில் பணிப்பெண்களாகப் பணிபுரிய அனுப்பப்பட்டு அங்கே பெரிதும் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஓய்வின்றி வேலை செய்வதாகவும், துன்புறுத்தப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தாம் தொடர்ந்தும் குவைத்தில் தங்கியிருக்க விரும்பவில்லை என குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறிவித்துள்ளனர்.

## ஹெலி சூடு

நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் ஒன்று தெல்லிப்பளை, அம்பனைப் பகுதிகளில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி சென்றது. சேத விவரம் தெரியவில்லை. 50

## கடற்படை தாக்குதல்

நேற்று காலையும் நேற்று முன்தினமிரவும் காரைநகர் கடற்பரப்பிலிருந்து கடற்படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பலத்த பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இவை மூளாய், பொன்னாலை, சுழிபுரம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றித் தெரியவில்லை.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை இரவும் கடற்படையினர் சேந்தான்குளம்பகுதியை நோக்கி கடற்பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர். 2 ஓ 50

## விசேட கொடுப்பனவு

1992 தை மாதம் முதல் மூவாயிரம் ரூபாவுக்குக் குறைந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அனைத்துக் கட்டுறவு ஊழியர்களுக்கும் 100 ரூபா விசேடபடியாக மாதாந்தம் வழங்கப்பட வேண்டுமென்ற அரசாங்க அறிவித்தலின்படி அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம் தனது பணியாளர்கள் அனைவருக்கும் தை, மாசி, பங்குனி, சித்திரை ஆகிய நான்கு மாதங்களுக்குமான கொடுப்பனவுகளை இம்மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கியுள்ளது. 48

## கொடுப்பனவு இல்லை

நடைபெற்று முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை செயலக பணியாற்றிய சில மேற்பார்வையாளர்கள் நோக்குநர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை

## அக்கரைப்பற்றில் கண்ணிவெடி இரு அதிரடிப்படையினர் பலி

அக்கரைப்பற்றில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் விசேட அதிரடிப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.

வாகனத்தில் இவர்கள் வந்து கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் 5 அதிரடிப்படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று ஜனாதிபதி இப்பகுதிக்கு விஜயம் செய்யவிருப்பதால் இவர்கள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கள்ளச் சாராயம் குடித்து ஒரிஸாவில் 161 பேர் பலி

ஒரிஸாவில் கள்ளச் சாராயம் அருந்தியதால் சுமார் 161 பேர் உயிரிழந்தனர்.

மூந்நூறு பேர் வரை இன்னும் ஆஸ்பத்திரியில் மிக மோசமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலருக்கு கண்தெரியாமல் போய்விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

1989ஆம் ஆண்டு முதல் இதுவரை மூன்று தடவைகள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் ஒரிஸா மாநில அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மத்திய அரசு குற்றம்சாட்டியுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து ஒரிஸா மதுவிலக்குத்துறை அமைச்சர் ராஜினாமா செய்துள்ளார்.

## ராஜீவ் காந்தி கொலை 21 பேர் மீது குற்றப்பத்திரிகை

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான குற்றப்பத்திரிகை இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்படும் என அதனை விசாரித்து வரும் விசேட புலனாய்வுக்குழுவின் தலைவர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

தகுந்த ஆதாரங்களுடன் இதுவரை இருபத்தொரு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். மேலும் சந்தேகிக்கப்படுவோர் மீதான ஆதாரங்கள் கிடைத்தால் அவர்கள் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

★ முன்னாள் அமைச்சர் பேச்சு

## கறுப்பு பூனைகள் யார் என மக்களுக்கு இன்று தெரியும்

நாம்தான் கறுப்பு பூனைகளின் படுகொலைகள் இன்று ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இக்கறுப்பு பூனைகள் யார் என்பது மக்களுக்கு இப்பொழுது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு முன்னாள் தொழில் அமைச்சர் ஜி.எம். நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி பேசுகையில் நான் கொண்டுவந்த மகாபொல திட்டத்தினால் பல மாணவர்கள் உயர்கல்வியை பெற முடிகிறது என்றார். ஜனாதிபதி ஆட்சி இந்த நாட்

# தமிழக சட்டப்பேரவை கலைக்கப்படலாம்!

## உயர் நீதிமன்றம் சிபார்சு செய்தால் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு

பத்திரிகையாளர்கள் பிரச்சினையால் தமிழக சட்டப்பேரவைக்கும், உயர் நீதிமன்றத்திற்கும் எழுந்துள்ள மோதலால் தமிழக சட்டப்பேரவை கலைக்கப்படலாம் என அரசியல் சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் நாடு சட்டப்பேரவைக்கும் உயர் நீதிமன்றத்துக்கும் தற்போது எழுந்துள்ள மோதலையடுத்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 143 பிரிவின் கீழ் ஒரு சட்டசபை அரசை நடத்திச் செல்ல முடியாது என உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தால் அவர் சட்டசபையைக் கலைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு ஜனாதிபதி கலைத்த பின்னர் அம் மாநிலம் ஜனாதிபதி ஆட்சியாக பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல் செய்யாவிடில் ஏனைய சட்டப்பேரவைகளும் அவ்வாறு நடந்து கொள்ளலாம் எனவும் சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

★ சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அறிக்கை

## தமிழக சட்டப் பேரவையில் எவரும் தலையிட முடியாது

முரசொலி, மாலை முரசு பத்திரிகைகளின் ஆசிரியர்கள் இலக்கிரேட்டட் வீக்லி செய்தியாளர் ஆகிய மூவரையும் கைது செய்த சட்டப்பேரவை கண்டிக்க திருத்துவது தான் விடுத்த பிடியாணையும், சட்டப்பேரவையின் தீர்மானமும் செல்லுபடியாகும் என தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை நேற்று விடுத்த சபாநாயகர் உயர் நீதிமன்றமோ வேறு சட்ட விதிகளின் படி தமிழக சட்டப்பேரவையில் தலையிட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதன்படி எந்தவொரு நீதிமன்றமும் அனுப்பும் உத்தரவுகளுக்கு சட்டப்பேரவை சபாநாயகரான நாமோ, அல்லது பேரவை செயலாளரோ பேரவைக் குழுவோ பதிலளிக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

— 04ஆம் பக்கம் பார்க்க

## பத்திரிகையாளருக்கு ஆபத்து இந்திய ஜனாதிபதிக்கு மகஜர்

தமிழ் நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் இல்லை எனவும் இதில் ஜனாதிபதி தலையிட நான்கு பத்திரிகையாளர் சங்கங்கள் ஜனாதிபதி வெங்கடராமனிடம் மகஜர் மூலம்

திய இல மேற்பார்வையாளர் கள் நோக்குநர்க ளுக் கான கொடுப்பனவுகள் இதுவரை அனுப்பி வைக்கப்பட வில்லை என தெரிக்கப்படுகிறது.
இப் பரீட்சை க் கி க பணி யாற்றிய உத்தியோகத்தர்கள் தமது கொடுப்பனவுகளை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பெற்று ச்சதாக வும் தெரிவிக்கப்படுகிறது 18

## மணிவிழா

இன்று 10.5.1992 ஞாயிறு பி.ப 8 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் மணிவிழா பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் தலைமையில் நடைபெறும்.

...ருக்கு ...தெரிவ வருகின்றது.
இவ்வாறு ... தொழில் அமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திர அழுத்தமளிக்...

... மாணவர்கள் உயர்கல்வியை பெற முடிகிறது என்றார்.
ஜனாதிபதி ஆட்சி இந்த நாட்...
— 4 ஆம் பக்கம் பார்க்க

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை நேற்று விடுத்த சபா நாயகர்; உயர் நீதிமன்றமோ வேறு அமைப்புக்களோ அர...

தமிழ் நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் இல்லை எனவும் இதில் ஜனாதிபதி தலையிட வேண்டும் எனவும் கோரி

மணிவிழா காணும் பேராசிரியர்

# கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களை

# முரசொலி வாழ்த்துகிறது.

நான்கு பத்திரிகையாளர் சங்கங்கள் ஜனாதிபதி வெங்கடராமனிடம் மகஜர் மூலம் தெரிவித்துள்ளன.
பத்திரிகைச் சுதந்திரம் மட்டுமின்றி தமிழகத்தில் பத்திரிகையாளரின் உயிருக்கே ஆபத்தெனவும் அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அறணைகடித்து மரணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் அறணை கடித்ததினால் பலர் உயிரிழந்துள்ளனர்.
சித்திரை புதுவருடத்திற்கு பின்னர் 15 பேர் வரையில் இதனால் கடியுண்டு இறந்துள்ளதாக கூறப்படுகின்றன
— 04 ஆம் பக்கம் பார்க்க

# இவ்வார இராசிப்பலன்

10.05.92 - 16.05.92

## மேடம்

உங்களுக்கும் போராட்டத்தைக் கொடுக்கும் உங்களின் முக்கிய விஷயங்களைச் சாதிக்க ஓடியாடித் திரிவீர்கள். அலைச்சல், ஏமாற்றம் சகஜம். சகோதரர்களின் திருமணப் பேச்சு வார்த்தைகள் வெற்றிதரும். தூரத்துச் செய்தி துயரத்தைப் போக்கும். அதிக செலவால் கவலை வரும். இவ்வாரம் சமாளிப்பது உங்களின் கெட்டித்தனத்திலே தங்கியுள்ளது. 15, 16 ஆம் திகதிகளில் கவனமாக இருக்கவும்.

## இடபம்

உங்கள் செல்வாக்கால் பல காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள் பிறருக்கு உதவிகளும் செய்வீர்கள் தொழில் ஸ்தானத்தில் நல்லதை எதிர்பார்க்க முடியாது வரவேண்டியதை எதிர்பார்க்க முடியாது உறவினர் குடும்ப அலுவல்கள் காரணமாக வீண் குறைகள் சொல்லுவார்கள் ஆலயதரிசனம் நன்மைகள் தரும்.

## மிதுனம்

உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாமலிருக்காது. உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளுங்கள். பிறரின் அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள் அலைச்சலைக் கொடுத்து. பிறருக்காக அலுவல்கள் செய்தாலும் நன்மை சொல்ல மாட்டார்கள் தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைத் தரும்.

## கடகம்

உங்களைப்பற்றி நாலுபேர் பேசுவார்கள் கவலையாக இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் கவனமாக இருந்தால் நல்லது குடும்பசுகம் கிடைக்கும் பணவரவு சுமாராக இருக்கும் உறவினரின் கொண்டாட்டம் மகிழ்ச்சிதரும் குடும்பத்தில் ஒருவரால் வைத்தியச் செலவு அதிகரிக்கும்.

## சிங்கம்

உங்களுக்கு காரியங்கள் அனுகூலமானாலும் திருப்தி வராது அடிக்கடி உடல்களைப்படையும் காய்ச்சல், அல்லது சளம் வரலாம். மறைமுக எதிரி இருந்தாலும் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. தொழில் ஸ்தானத்தில் தேவையற்ற குறைகள் வர இடமுண்டு தெய்வ வழிபாட்டால் நற்பலனை அடைவீர்கள்.

## கன்னி

உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் சிறு மாற்றங்கள் ஏற்படும் குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும் வயிற்றுநோய் வரும் காரியசித்தி கொடுக்கும் சிறு பிரயாணம் அல்லது ஆலய தரிசனம் அமைதியைத் தரும் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கலாம் உங்களைப் பிறருக்கு கஷ்டம் வராது பார்த்துக்கொள்ளவும்.

**நல்லூர் சோதிடர்**
**இ. மகாதேவா**

## துலாம்

நீங்கள் தேவையற்ற காரியங்களில் ஈடுபட்டு கஷ்டம் படுவீர்கள் தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள் காணி சம்பந்தமான பேச்சுக்கள் வரும் குடும்பத்தினரின் செலவால் கடன்படும் நிலை ஏற்படும். கூட்டாளிகளுடன் அவதானமாக நடக்கவும்.

## விருச்சிகம்

உங்களுக்கு காலம் கடந்த ஞானத்தால் வேதனை ஏற்படும் பொருள்கள் களவு அல்லது தவறிப் போகலாம். தொழில் ஸ்தானத்தில் வீண் பழி சொல்வார்கள், நெஞ்சு நோவும், இளைய சகோதரத்தால் கவலையும் ஏற்படும், அடிக்கடி பயப்படுவீர்கள் ஆலய தரிசனம் ஆறுதலைத் தரும்.

## தனுசு

உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகளும், மற்றவர்களின் ஆதரவும் வரும். பொருள்வரவு ஏற்படும் நல்ல உதவிகளைப் பிறருக்குச் செய்வீர்கள் பொருட்செலவும் திடீர் இழப்பும் வராமலும் இராது. குடும்பத்தில் நன்மைகள் நடக்கும் உங்கள் சொல்வாக்கால் பகைமை ஏற்படலாம் கவனமாக இருக்கவும்.

## மகரம்

உங்களுக்கு அதிமாற்றமான காலமாகும் விஷபீடைகள் வரும் அடிக்கடி குடும்பத்தினரைக் கோபித்து வேதனைப்படுவீர்கள் இனஜனங்களில் முக்கியமான ஒருவரின் பிரிவு அல்லது இழப்பு வேதனையைத் தரும் தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும், 10, 11 ஆம் திகதிகளில் போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.

## கும்பம்

உங்களின் முயற்சிகள் பயனற்றுப்போகும் குடும்பத்தினருக்காக அலைச்சல்படுவீர்கள் புதிய இடம் புதிய நண்பர்கள் உதவிகள் செய்வார்கள் மனத்தில் பயமும், வீண் விரயமும் ஏற்படும் தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்க 12, 13 ஆம் திகதிகளில் பொருளிலும், பிரயாணத்திலும் கவனமாக இருக்கவும்.

## மீனம்

உங்களுக்கு கவலை பிறந்து நியாயம் பிறக்கும் அலைச்சலுக்கு குறைவிருக்காது அடிக்கடி சீறிச் சினப்பீர்கள் தொழில் ஸ்தானத்தில் நண்பர்கள் உதவுவார்கள் பொருள் விஷயத்தில் பொறுப்பு நின்று குறைகேட்பீர்கள் குடும்பத்தினருக்காக பிரயாணம் செய்ய வேண்டி வரலாம் 13, 14, 15 ஆம் திகதிகளில் இழப்புகளைச் சந்திக்கலாம்.

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

வட்டுக்கோட்டை [illegible] பதி அருள்மிகு ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தான மண்டலாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் யாகபூசைகள் ஆரம்பமாகி சங்காபிஷேகமும், விசேடபூசையும் நடைபெறும். (18)

## கைதடி நவீல்ட் பாடசாலை ஆரம்பம்

கைதடி நவீல்ட் பாடசாலை பழைய மாணவர் சங்கமும், புதிய முகாமையாளரும் சேர்ந்து எடுத்த முயற்சியின் பயனாக நாளை திங்கட்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை ஆரம்பமாகிறது.

## மணவாளக் கோல திருவிழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் மணவாளக் கோலத் திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 4.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் திருவூஞ்சலும், மாலை 6.00 மணிக்கு அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளலும் நிகழும்.

## வருடாந்த உற்சவம்

சங்கானை வெளியில் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இக்கோவில் தேர்த்திருவிழா இம்மாதம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 16 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன. 18

## மட்டுவில் முருகன் உற்சவம்

மட்டுவில் வேரத்தேணி கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 87

# நமது சொத்து பேராசிரியர் கா. சிவத்தம்பி

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் பன்முகப்பட்ட பணிகள், ஆற்றல்கள் நமது மொழிக்கும், இனத்துக்கும் வலுச் சேர்ப்பவை. நமது இனத்தின் ஓர் அடையாளமாக அவர் விளங்குகிறார். அவர் தமிழ் மக்களின் சொத்தாக விளங்குகிறார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி இருமைப் பணியாளராக — தமிழ்மொழிக்கு வளம்சேர்க்கும் ஆக்கஇலக்கிய கர்த்தாவாகவும், அதன் உந்து சக்தியாகவும் விளங்கும் பேராசிரியராகவும், அல்லற்பட்டு அவதியுறும் மக்களின் துயரங்களைக்கண்டு நெகிழ்ந்து அத்துயரச் சுமையில் ஒரு சிறு பங்கையாவது குறைக்க முயலும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராகவும் அவர் விளங்குகிறார் சாஹிராக் கல்லூரியின் ஆசிரியராக, பாராளுமன்றத்தின் சமகால மொழிப் பெயர்ப்பாளராக வித்தியோதய பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் தலைவராக அவர் ஆற்றிய, ஆற்றிவரும், சேவைகள் தொழில் சார்ந்த பணிகள்; நாடக நடிகராக, நாடக இயக்குநராக அவர் செயற்பட்டமை அவரது கலையார்வ வெளிப்பாடுகள்; பர்மிங்காம் பல்கலைக்கழகத்தின் கலாநிதியாக அவர் பட்டம் பெற்றமை அவரது அறிவுக்கும், ஆற்றலுக்கும் கிடைத்த அங்கீகாரம் இவையனைத்துக்கும் மேலாகப் பேராசிரியர் சிவத்தம்பியின் பன்முகப்பட்ட ஆற்றல்களின் வெளிப்பாடுகளில் அவர் தனது மொழிக்கும், சமூகத்திற்கும் செய்துவரும் பணிகள்தாம் அவரை நம் சொத்தாக மதிப்பிட வைக்கின்றன.

நவீன தமிழிலக்கிய வரலாற்றில் பேராசிரியர் சிவத்தம்பி என்ற இலக்கிய ஆய்வாளனுக்கு ஒரு மதிப்பார்ந்த இடமுண்டு அவரின் இலக்கிய ஆய்வுகள், விமர்சனங்கள் தமிழ்மொழிக்கு வளஞ்சேர்ப்பனவாகவும், நவீன தமிழிலக்கியத்தினை உலகஇலக்கியப் பரப்பிற்கு நேராக எடுத்துச் செல்லும் செந்நெறியைக் காட்டுவனவாகவும் உள்ளன. அவர் தனது கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கும் சொற்கள் புதியவை. நின்று நிதானித்துப் படிக்கும் போது, மனதில் பதியும்போது, புதுப்புதுச்சுவையும் அர்த்தமும் தருவன அவைதாம். பேராசிரியர் சிவத்தம்பியின் நூல்களில் இடம்பெறும் புதிய சொற்கள், மொழியியல் மாணவர்களின் மேற்படிப்புக்குரிய ஆய்வுகளாக இந்தியத் தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் அமைந்துள்ளன. அவரது ஆற்றலை, மொழிப்பணியை இந்திய அறிஞர்கள், புரிந்துகொண்ட அளவிற்கு ஈழத்தவர்கள் இன்னும் சரிவர உணரவில்லை. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களை வெறும் மார்க்சியச் சிந்தனையாளராகவும் அணிப்பிரக்ஞை உடையவராகவும் மதிப்பீடுசெய்து கொண்டிருந்த கருத்து நிலைமாறி, அவர் அவற்றிற்கு அப்பால் கலை இலக்கியச் சிந்தனைப்பரிமாணத்தின் அகண்ட எல்லைகளை எட்டியுள்ளார் என்பது இன்று புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. ஆகவே அவர் நமது பெருஞ்சொத்து.

இலக்கிய ஆய்வு நூல்களை எழுதுவதோடு அவர் நின்றிருந்தால் அவர் சிறந்த சிந்தனையாளராக மட்டும் கருதப்பட்டிருப்பார் அது தமிழுக்கு வளம் சேர்த்திருக்கும், அவருக்கும் புகழ் இன்னும் சேர்ந்திருக்கும். ஆனால் அவர் அந்தப் புகழ் நிலையிலிருந்து விடுபட்டு, இன்று தமிழ் மக்கள் பேரினவாத அடக்குமுறைகளால் உயிர், சொத்து, அமைதி அனைத்தையும் இழந்து பிறந்த மண்ணிலேயே அகதிகளாக அவதியுறும் துன்பதுயரங்களைத் துடைக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டமை அவரது சமூக நேயத்துக்கு எடுத்துக்காட்டு.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் எழுத்துப் பணியை சமூகப்பணி இன்று முழுமையாக விழுங்கிவிட்டது போலப்படுகிறது. சிறந்த சிந்தனையாளராகத்தான் சமூகத்தை இரக்கத்தோடும் பொறுமையோடும் பார்க்க முடியும். அது பேராசிரியர் போன்றோரால்தான் முடியும்; சாத்தியமாகும்.

அவரது காலகட்டத்தில் வாழ்கின்றோம் என்ற

## மணி விழா நாயகனுக்குது வாழ்த்

கலைத்துறைக்கும் தமிழியலுக்கும

## மணி விழா நாயகனுக்குது வாழ்த்

கலைத்துறைக்கும் தமிழியலுக்கும்
அருப்பணியாற்றிய பெருமகனும் இன்றைய மணி விழா நாயகனுமாகிய

பேராசிரியர்

# கார்த்திகேசு சிவத்தம்பி

அவர்களை

இந்நாட்டுக் கலைஞர்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர் இளம் கலைஞர் மன்றம்

05019

கட்டுப் பெறப்படுகிறது. சிறந்த சிந்தனையாளராலேதான் சமூகத்தை இரசகதேசடும் சொருக் போகும் பார்க்க முடியும். இது பேராசிரியர் பேரின் நேராலேதான் முடியும்; சாத்தியமாகும்.

அவரது காலகட்டத்தில் வாழ்கின்றோம் என்ற சங்கதி மட்டுமே எமக்குப் பெருமை.

செங்கை ஆழியான்

## புதிய திட்டம் நடைமுறை


தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் சனசமூக நிலையங்களினாலும் கிராம முன்னேற்றச் சங்கங்களினாலும் நடாத்தப்படும் பாலர்பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறார்களுக்கு போசாக்குப் பாலுணவு வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்குரிய பாலுணவும் சீனியும் இதன் முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் மாணவர்களுக்கு பாலர்பாடசாலைகளிலேயே பாலுணவு கொடுக்கப்படுமெனவும் அதற்கான ஏற்பாடுகளை பொறுப்பான சனசமூக நிலையங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் மேற்கொண்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது 87

# ✠ வெள்ளி ✠ பொன் ✠ பவள

## மும்மடி விழா நாயகர்



# மேதகு வண.
# வ. தியோகுப்பிள்ளை
## ஆண்டகை

மாதவ முனிவர்
மனங்கவர் தலைவர்
திருமறையின் காவலன்
தீந்தமிழின் பாவலன்
அவர்களை

## யாழ். மறை மாவட்டம்

மகிழ்ச்சியுடன் வாழ்த்தும்

எழுச்சிமிகு நிகழ்ச்சி

இடம்:- யாழ். புனித மரியன்னை பேராலய முன்றில்

தினம்:- 11-05-1992 திங்கள்

நேரம்:- மாலை 4 மணி

இறை புகழ் ஓங்குக - நம்
இனத்துயர் நீங்குக

### பேராயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை
### பல்லாண்டு வாழ்க!

யாழ் மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகையை இந்த நாடு நன்கு அறியும். இவரது சேவை நலனைப் பாராட்டி விசேட சிறப்பிதழ் ஒன்று வெளிவருவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இவர் தமது சமயத்தின் பெயரால் அதன் உயர்வுக்காக ஆற்றிய சேவைகள் அளப்பில. கல்வியிலும் சமூகத்தொண்டிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் யாழ். மறை மாவட்டத் தலைமைக் குருவராய் இருந்து தம் மாலான பணிகளை அமைதியாய் ஆற்றிவந்துள்ளார். மக்களிடையே சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் என்பன நிலைவேண்டுமென அல்லும் பகலும் முயன்று வந்தார்.

நாட்டின் நன்மைக்காக உழைத்த நல்லவர்களுள் தியோகுப்பிள்ளை ஆண்டகையையும் ஒருவராவார். அவரை அவர் சார்ந்த மதத்தினர் மாத்திரமன்றி ஏனைய மதத்தினரும் அணுகுவதுண்டு. எவராய் இருந்தாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, உரையாடும் பண்பு அவரிடம் உண்டு.

கடந்த சில ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் ஏற்பட்டுவரும் அனர்த்தங்களைக் கண்டு வேதனையுற்ற அவர் நாட்டில் அமைதியை நிலைநாட்ட அரும்பாடுபட்டார். சிறந்த கல்விமானாகிய தியோகுப்பிள்ளை ஆண்டகை மக்களால் மதிக்கப்பெற்ற மேதை. ஆடம்பரமின்றி அமைதியாய் வாழ்ந்த துறவியாவர் வெள்ளிவிழா, பொன்விழா, பவளவிழா ஆகிய விழாக்களைக் காணும் பேறுபெற்றவர். இப்பெரியார் தமது பொறுப்புக்களிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும் இவரது சேவை மக்கள் குலத்துக்கு மாண்புறப் பொலிய - அவரின் உடல்நலம் மங்காது சிறக்க - அன்னார் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

கா. மாணிக்கவாசகர்
யாழ். அரச அதிபரும் மாவட்ட ஆணையாளரும்

05018

# அரசுக்கு எதிராக வழக்கு எதிர்க்கட்சிகள் முடிவு

உடுகம்பொலவின் அறிக்கை தேசிய ஆணையாளரின் அறிக்கை என்பன தொடர்பாக அரசுக்கு எதிராக ஆறு எதிர்க்கட்சிகள் வழக்குத் தொடரவுள்ளன.

நாடு முழுவதும் இவற்றைப் பிரச்சாரமாக பாவித்து ஊர்வலம் நடத்தவும் இக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இம் மாதம் 25ஆம் திகதி கண்டியில் முதல் ஊர்வலம் நடைபெறவுள்ளது.

# பட்டதாரி ஆசிரியர் நியமனம் ஆகஸ்ட் மாதம் பரீட்சை

நாட்டில் உள்ள சகல பட்டதாரி ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி வெளியான அரசவர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர் நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் 81 பேருக்கு கடந்த 4ஆம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

தொண்டர் ஆசிரியர் பட்டியல்களில் இருந்து மேலும் நூறு பேருக்கு நேர்முகப்பரீட்சை நடைபெற்றது.

அவற்றில் 76 பேரின் பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# அட்டாளைச் சேனையில் புதிய கல்விக் கல்லூரி

அட்டாளைச்சேனையில் புதிய கல்விக்கல்லூரியை ஜனாதிபதி பிரேமதாஸ இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு திறந்துவைப்பார்.

கிழக்கு மாகாணத்தில் நிறுவப்படும் முதலாவது பல்கலைக்கழக கல்லூரியும் முஸ்லிம்களுக்காக அமைக்கப்பட்ட கல்விக்கல்லூரியும் இதுவாகும்.

இதேவேளை நுவரெலியாவிலும் ஸ்ரீபாத கல்விக்கல்லூரி முதலாவதாக தமிழில் போதிக்கப்பட நிறுவப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.


## புற்றுநோய் பற்றிய அறிவித்தல்

அண்மைக்காலங்களில் எமது பகுதியில் பலர் இந்நோயினால் பாதிப்படைந்துள்ளனர். தற்போதைய புற்றுநோய் பற்றிய அறிவை நாம் பயன்படுத்தினால் 70% மான புற்றுநோயைத் தடுக்கவும், பூரண சுகமாக்கவும் முடியும்.

### புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள்

1. ஆறாத புண்- குறிப்பாக வாய், தொண்டைப் பகுதி
2. உடல் துவாரங்களிலிருந்து அசாதாரண குருதி ஓட்டம்/ நீர்க்கசிவு
3. மார்பகத்தில் / உடலில் அசாதாரண கட்டி உண்டாகுதல்.
4. தொடர்ச்சியான அஜீரணம் அல்லது உணவு விழுங்க முடியாதிருத்தல்.
5. உடலில் உள்ள மறு அல்லது மச்சத்தில் மாற்றம் ஏற்படுதல்.
6. தொடர்ச்சியான இருமல் அல்லது தொண்டை கரகரப்பு.
7. மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்படுதல்.
8. காரணம் கண்டுகொள்ள முடியாத தேக மெலிவு

இவை உங்களுக்கு இருப்பின் வைத்திய ஆலோசனை பெறுதல் அவசியம்.

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்,
இல. 107, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
05. 05 1992. 05017


★ உடுகம்பொல தகவல்

# றோகண விஜேவீராவை கறுப்பு பூனைகள் கொன்றன

ஜே. வி. பி. தலைவர் றோகண விஜேவீராவை கறுப்பு பூனைகளே கொலை செய்ததாக முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் பி. உடுகம்பொல கூறியுள்ளதாக பி. பி. ஸி. சிங்கள சேவை தெரிவித்தது.

உலப்பனையில் றோகண விஜேவீராவை இராணுவத்தினர் பிடித்து கறுப்பு பூனைகளிடம் ஒப்படைத்ததாகவும் அவர் குறிப்பிட்டதாகவும் பி. பி. ஸி கூறியது.

றோகண விஜேவீராவை பிடித்து வைத்திருக்க வேண்டாம் எனவும் கறுப்பு பூனைகளிடம் ஒப்படைக்குமாறும் உடுகம்பொலவுக்கு அரசு உத்தரவிட்டதாகவும் பி. பி. ஸி குறிப்பிட்டது.

## சபாநாயகர் பற்றி பி. எச். பாண்டியன்

தமிழக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பத்திரிகையாளர் விடயத்திலும் உயர் நீதிமன்ற விடயத்திலும் நிலைமையை சீர் செய்ய முடியாது செய்துள்ளார் என முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியன் தெரிவித்துள்ளார்.

சேடப்பட்டி முத்தையா இயல்புநிலைக்கு திரும்பமுடியாத அளவுக்கு பிரச்சினையை மோசமான நிலைக்குத் தள்ளிவிட்டார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## சு. க. ஆட்சியில் பத்திரிகைகளுக்கு மூடுவிழா

இந்த அரசு பத்திரிகையாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கியுள்ளது என ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று காலியில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் பல பத்திரிகைகள் மூடப்பட்டன இதனால் பல பத்திரிகையாளர்களும் ஊழியர்களும் வேலையிழந்தனர் எனவும் அவர் சொன்னார்

அறனை...

மருத்துவமனை வட்டாரங்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. 45

தமிழக...

சட்டப்பேரவையின் உரிமையை மீறியதற்காக இம் மூன்று பத்திரிகையாளர்களையும் கைது செய்து பேரவை கூண்டில் நிறுத்த மாறு சபாநாயகர் பிடியாணை விடுத்திருந்தது தெரிந்ததே.

இதனை ஆட்சேபித்து மூவரும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்களின் படி இப் பத்திரிகையாளர்களை கைது செய்யக் கூடாது என தமிழக சட்டப்பேரவைக்கு எதிராக உயர் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது தெரிந்ததே.

முரசொலி ஆசிரியரின் மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்ததும் குறிப்பிடத்தக்கது.

கறுப்பு...

கொடு உத்தரவு என நாம் ஆதரவளித்தோம். ஆனால் இன்று சர்வாதிகார ஆட்சி இந்த நாட்டில் நடைபெறுகிறது எனவும் அவர் சொன்னார். 06

## காணாமல் போன நகைக்கு மக்கள்வங்கி நட்டஈடு

அவிசாவளை மக்கள் வங்கியில் ஒப்படைப்பதற்காக வைக்கப்பட்டு காணாமல்போன அடகு நகைகளுக்கு நட்டஈடு வழங்கப்படும் என மக்கள் வங்கித் தலைமையகம் அறிவித்துள்ளது.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோது இவை காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பவுணுக்கு 4600 ரூபா வீதம் இந்த நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

சுமார் 207 பேரின் அடகு நகைகள் காணாமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதலைப்புலிகள் மக்களை கொல்பவர்களல்ல

விடுதலைப் புலிகள் ஆயுதப் படையினருக்கு எதிராகவே போராடுபவர்கள் எனவும் பொதுமக்களைக் கொல்வதில்லை என்றும் சிங்கள பி. பி. ஸி. தெரிவித்தது.

அண்மையில் நடைபெற்ற முஸ்லிம்களின் படுகொலைச் சம்பவம் மூன்றாம் நபர்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும் பி. பி. ஸி மேலும் குறிப்பிட்டது.

## பஞ்சாப்பில் குண்டு வெடிப்பு 10 பேர் பலி; பலர் காயம்

பஞ்சாப்பில் நேற்று இடம்பெற்ற கார் குண்டுவெடிப்பில் இரு படையினர் உட்பட பத்துப்பேர் கொல்லப்பட்டனர் 7 படையினர் உட்பட 55 பேர் காயமடைந்தனர்.

தூரத்தில் இருந்து இயங்கும் வெடிகுண்டே இவ்வாறு வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாநில அமைச்சர் ஒருவர் காரில் வந்துகொண்டிருந்த போது, எதிரே நிறுத்திவைக்கப்பட்ட காரில் இக் குண்டு வெடித்தது ஆனால் அமைச்சர் மயிரிழையில் தப்பியுள்ளார்,

## பேரவை - நீதித்துறை மோதல் ஜனதாதள் தலைவர் கவலை

தமிழக சட்டப் பேரவைக்கும், நீதித்துறைக்கும் பத்திரிகையாளர் விடயம் தொடர்பாக எழுந்துள்ள மோதல் நிலைமை குறித்து ஜனதாதள் கட்சி தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சென்னையில் கவலை தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பொதுமக்களின் நலனை முன்னிட்டா இல்லையா என்பது குறித்து உயர் நீதிமன்றத்தின் முடிவுக்கே விடவேண்டும் எனவும் அவர் கருத்து வெளியிட்டார்,


## லொறிக்கொள்வனவு

எமது சங்கத்திற்கு நல்ல தரத்தில் உள்ள ஒரு லொறி தேவைப்படுகின்றது. விற்பனை செய்ய விரும்புவோர் முழு விபரங்களுடன் நேரடியாகவோ எழுத்து மூலமோ கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்,

பொது முகாமையாளர்
பச்சிலைப்பள்ளி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,
பளை.

05020


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் [illegible] வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 10-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது